செய்தி வெளியீடு எண்.705 12.10.2009

**ஜம்மு–காஷ்மீர் மாநிலத்தில் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட திருவண்ணாமலை மாவட்டத்தைச் சார்ந்த மத்திய ரிசர்வ் காவல்படை வீரர் குடும்பத்திற்கு 5 இலட்ச ரூபாய் நிவாரண உதவி!**

# முதலமைச்சர் கலைஞர் ஆணை!

---

**திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், புதுப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த இராஜேந்திரன் என்பவரின் மகன் இராஜசேகர் மத்திய ரிசர்வ் காவல் படையில் பணியாற்றி, ஜம்மு–காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகரில் பணிபுரிந்து கொண்டிருந்தபோது தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.**

**உயிரிழந்த இராஜசேகர் மலைவாழ் இனத்தைச் சார்ந்தவர் என்பதாலும், அவரது குடும்பத்தின் வறிய சூழ்நிலையைக் கருதியும், சிறப்பு நிகழ்வாக அவரது குடும்பத்திற்கு கார்கில் இராணுவ வீரர்கள் நிவாரண நிதியிலிருந்து 5 இலட்ச ரூபாய் நிவாரண நிதியுதவி வழங்கிடவும், இறந்த காவலரின் மனைவி திருமதி.அமுதா என்பவருக்கு ஜவ்வாது மலை கும்லாமரத்தூர் கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளியில் காலியாக இருக்கும் சத்துணவு அமைப்பாளர் பணியிடத்தில் பணிநியமனம் வழங்கிடவும் முதலமைச்சர் கலைஞர் இன்று (12.10.2009) ஆணையிட்டுள்ளார்.**

***********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9